**ஜூன் – 10**

**"ஆண்டவரே ஜெபம் பண்ண எங்களுக்குப் போதியும்." - லூக் 11 : 1.**

சுருக்கமாக, நமது ஜெபங்கள் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாக இருக்க வேண்டுமானால், அவைகள், நம்பிக்கையுள்ள விசுவாசமும், அன்புள்ள மதிப்பு, பயபக்தி, தேவ ஏற்பாட்டோடு கொண்டுள்ள பூரண அனுதாபம் தெய்வீக சித்தத்திற்குக் கீழ்ப்படிதல். தேவன் பேரில் சிறுபிள்ளை போல சார்ந்திருத்தல், பாவங்களையும் குறைகளையும் ஒப்புக்கொண்டு, தெய்வீக வழிநடத்துதலுக்காகவும், பாதுகாப்புக்காகவுமுள்ள ஆசையை வெளிப்படுத்தி, மன்னிப்புக்காகவுள்ள விருப்பம் ஆகிய இவைகளெல்லாவற்றையும் தெரிவிக்கிறதாக இருக்க வேண்டும். எப்பொழுதும் இவைகள் எல்லாவற்றயும், வார்த்தைகளின் மூலமாக வெளிப்படுத்தாமல் இருக்கலாம். ஆனால் குறைந்த பட்சம் ஆத்துமாவின் மனப்பாங்கு இப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்.

"சொல்லப்பட்ட அல்லது சொல்லப்படாத ஆத்துமாவின்

உண்மையான விருப்பமே ஜெபம்."

**- Z '95, 213 (R 1864).**

முறையாக ஜெபிப்பதற்காக கர்த்தருடைய போதனைகள் நமக்கு வேண்டியதாய் இருக்கிறது. அவருடைய போதனைகளில்லாமல் எதைக் கேட்க வேண்டுமென்றும்; ஏன் கேட்க வேண்டுமென்றும்; எப்படி கேட்கவேண்டுமென்றும் நமக்குத் தெரியாது. அப்படியானால் எப்படி ஜெபிக்க வேண்டுமென்று நமக்கு அவர் போதிக்கத் தாழ்மையான வேண்டுதல்களோடு அவரிடம் சேர எவ்வளவு அவசியமாயிருக்கிறது! அவர் ஜெபத்தின் தகுந்த போதகராயிருக்கிறது போல, நாமும் தகுந்த மாணவராயிருக்கிறோமென்று நிரூபிப்பது நமக்கு நன்மையாயிருக்கிறது. ஜெபத்தின் தத்துவம், தனிப்பொருள்கள், தூண்டுதல்கள், பொருள்கள், நிபந்தனைகள், பழக்கம், அடக்குதல், தெரிவித்தல், பலன்கள் ஆகிய இவைகளை அவர் நமக்கு வெளிப்படுத்துவார்.

**-P '26, 76.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

சங் 5:1-3; 42:8; 109:4; 116:2; தானி 6:10; மத் 6:5-15; லூக் 2:37; 18:1-13; அப் 6:4; 10:2,9; ரோம 1:9; 12:12; எபே 1:15,16; கொலோ 1:9; 1தெச 3:10;5:17; 1தீமோ 5:5; 2தீமோ 1:3.

**கோபுரவாசிப்பு : Z '16, 18 (R 5832)**

**வினாக்கள் :** இந்த வாரத்தில் நான் நன்றாக ஜெபிக்கக் கற்றுக்கொண்டேனா? உதவியாக அல்லது பிரதிகூலமாக இருந்தவை எவை? பலன்கள் எவை?